மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"In clause 2, delete the words 'period of two' and insert the word 'few'".

திருத்தம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1981) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1981) நிறைவேற்றப் பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(4) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1981).

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு @(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1981) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

@ 488 ஆம் பக்கத்தில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2.

THIRU K. RAMAMOORTHY : Sir, I move the following amendment :—

"In clause 2, delete the words "four years and two months" and insert the words "some years".

(திரு. சோ. ஆறுமுகம் வழிமொழிந்தார்.)

* **திரு. க. இராமமூர்த்தி :** தலைவரவர்களே, இரண்டு வார்த்தைகள் சொல்லிக்கொள்கிறேன். இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்த வரையிலே, இந்த அரசு கொள்கை அளவில் 18 வயதானவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை என்ற அறிவிப்பு செய்திருக்கிறது. அதற்கான வாக்காளர் பட்டியல் தயாராக இருக்கிறது. இந்தக் கால நீடிப்பு காரணமாக அரசு சொல்கின்ற ஒரு ஆண்டு கடந்தால்கூட, இப்போது 18 வயது என்பவர்களுக்கு தேர்தலின்போது 19 வயது ஆகின்ற நிலை ஏற்படும். ஆகவே அரசினுடைய நோக்கமே, கொள்கையிலே மாறுபாடு உண்டாகிறது. ஆகவே சில ஆண்டுகள் என்ற எனது திருத்தத்தை ஏற்றுக்கொள்வதாக இருந்தால், குறிப்பாக அரசு எப்போது நினைக்கிறதோ அதற்கு ஏற்றாற்போல் தேர்தலை வைத்துக்கொள்ளலாம். நான் சொல்வது அரசுக்கே துணையாக இருக்கும். மத்திய ஆட்சி தலையீட்டினாலேதான் தேர்தல்கள் எல்லாம் தள்ளிப்போயிற்று என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அ.தி.மு.க. அரசு ஏற்பட்ட பிறகு எத்தனை முறை தாக்கீதுகள் வந்தன என்று தெரியவில்லை. மத்திய அரசு இருந்துகொண்டிருக்கின்ற நிலையிலேயேதான் வேறு மாநிலங்களில் உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மத்திய அரசு சொல்வதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள்கின்றார்கள். இந்த அரசு எத்தனை முறை தள்ளிப்போட்டி

ருக்கிறது? பலமுறை தள்ளிப் போட்டிருக்கின்றார்கள். அந்த நிலையிலே எல்லாம் மத்திய அரசு—தேர்தல்களை உடனடியாக வைக்க வேண்டும் என்று சொல்லிற்று, இப்போதுதான் "சென்சஸ்" என்று சொன்னார்கள். "சென்சஸ்" எடுக்கின்ற வரையிலே வேண்டாம். பிறகு தேர்தலை நடத்துங்கள்" என்று சொன்னார்கள். ஆனால் இப்போது சொல்லும் காரணம் என்ன? இங்கே வறட்சி இருக்கிறது, டிரௌட் (drought) இருக்கிறது என்ற காரணங்களைச் சொல்கின்றார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அலுவல்கள் முடியும் வரை அவையின் நேரம் நீடிக்கப்படுகிறது.

திரு. க. இராமமூர்த்தி: எதாவது காரணங்களை வைத்து அவ்வப்போது தள்ளிக்கொள்கிறார்கள். ஆகவே அரசுக்கு எப்போது வாய்ப்பு இருக்கிறதோ அப்போது தேர்தலை நடத்திக்கொள்ளலாம் என்ற அளவிலே, என் திருத்தம் அரசுக்குத் துணையாக இருக்கும் என்பதால், எனது திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, "four years and two months" என்பதை "some years" என்று திருத்த வேண்டும் என்று அங்கத்தினர் அவர்கள் சொல்கிறார்கள். அது தேவையில்லை என்பது என்னுடைய எண்ணம். காரணம் நாங்கள் தேர்தலை ஏற்கெனவே தள்ளிவைப்பதற்கான காரணங்களைச் சொல்லி அதற்குக் காலக் குறியீடுகள் எல்லாம் கொடுத்திருக்கிறோம். அதற்கு வேண்டிய விளக்கமும் கொடுத்திருக்கிறோம். வேறு பல மாநிலங்களில் இன்னும் தேர்தல் நடைபெறவில்லை என்பதையும் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே இந்திய தேர்தல் அதிகாரி திரு. ஷக்தர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தியா முழுவதும் மேல் சபை உறுப்பினர்களுடைய பதவிகள்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். 200-க்கு மேற்பட்ட பதவிகள் இன்னும் மாநிலங்களில் நிரப்பப்படவேண்டியிருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். நம்மைப் பொறுத்த வரையில், 21 இடங்கள். பக்கத்திலே ஆந்திராவில் 26 இடங்கள். உத்தரப் பிரதேசத்தில் 63 இடங்கள். ஆகவே இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்களுக்கு நான் கோடிட்டுக் காட்டி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே இந்தத் திருத்தத்தை வாபஸ் பெறவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : நான் திரும்பப் பெறுகிறேன், நேரம் ஆயிற்றே என்பதற்காக.

திருத்தம், அவையின் அனுமதியோடு, திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1981) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு, ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1981) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(பிற்பகல் 1-30)

(5) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1981.)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

@ 491 ஆம் பக்கத்தில் இணைப்பு VII ஆக அச்சிடப்பட்டுள்ளது.